செ. கு. எண்: 026 நாள் :20.01.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.1.2014

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கூடலூர் நகரைச் சேர்ந்த திரு. சேகர் என்பவரின் மகன் ஜெயபிரகாஷ் 30.12.2013 அன்று கூடலூர் வெட்டுக்காட்டிலுள்ள பெரியார் - வைகை சிறுபுனல் 3-வது பிரிவில் மராமத்துப் பணி செய்து கொண்டிருந்த போது, அருகிலிருந்த மின்கம்பியின் மீது தவறி விழுந்து மின்சாரம் தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த ஜெயபிராகாஷ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த ஜெயபிரகாஷ் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9